<u>செய்தி வெளியீடு:49</u> நாள்:11.04.2010

**மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர், திரு.பன்வாரிலால் புரோகித் அவர்களின் ஈஸ்டர் தின வாழ்த்துச் செய்தி**

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த தினமானது, உலகம் முழுவதும் புனித ஈஸ்டர் தினமாக கொண்டாடப்பட்டு வருகின்றது. மகிழ்ச்சிகரமான இந்நன்னாளில், எனது இதயம் நிறைந்த வணக்கத்தையும், நல்வாழ்த்துக்களையும், நம்முடைய கிறிஸ்துவ சகோதர, சகோதரிகளுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஈஸ்டர் பண்டிகையானது, இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் நினைவைப் போற்றும் வகையில் கொண்டாடப்பட்டு வருவதோடு மட்டுமல்லாமல் இயேசு கிறிஸ்து மனிதக்குலத்தின் மீட்பராகவும், அன்பு, சமாதானம், இரக்கம், மன்னிப்பு ஆகிய உயரிய பண்பு நலன்களை மனித சமுதாயத்தின் இரட்சிப்பிற்கான புதிய பாதையாக ஏற்படுத்தி அனைவரின் வாழ்வையும் ஒளிரச் செய்துள்ளார். இந்த ஈஸ்டர் தினத்தில் நாம் அனைவரும் நம்மைப்பிரிக்க சூழ்ச்சி செய்திடும் வெறுப்பு, பேதம், பாகுபாடு ஆகிய சக்திகளை முறியடித்து, நம்மை ஒருங்கிணைக்கச் செய்திடும் சக்திகளான அன்பு, மதிப்பளித்தல், சமத்துவம் ஆகிய சிறந்த பண்பு நலன்களைக் கொண்டு புதிய உலகத்தை அமைத்திட நாம் யாவரும் உறுதி எடுத்துக் கொள்வோமாக!

மேலும், உயர்த்தெழுந்த புனித தினத்தில், நாம் அனைவரும் அமைதி, நல்லிணக்கம். சகிப்புத்தன்மை ஆகியவற்றை வளர்ந்தோங்கச்செய்து, ஒளிமயமான எதிர்காலத்தை மனித சமுதாயத்திற்கு அளித்திட முன்வருவோமாக!

**பன்வாரிலால் புரோகித்**
**தமிழ்நாடு ஆளுநர்**

---

ராஜ்பவன், சென்னை – 22 ஒம்/-

நாள்:11.04.2010 கூடுதல் இயக்குநர் (ம.தொ)